[24th January 1970

(*b*) the number of copies printed in each of the journals during that year ;

(*c*) the number of subscribers for each journal during the year 1968–69 ; and

(*d*) whether such publication is self-supporting ?

மாநில கல்வி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட வெளியீடுகள்.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968–69-ஆம் ஆண்டில் மாநிலக் கல்வி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட வெளியீடுகளின் பெயர்கள் யாவை?

(இ) அவ்வாண்டில் ஒவ்வொரு வெளியீட்டின் அச்சடிக்கப்பட்ட படிகளின் எண்ணிக்கை என்ன ?

(உ) 1968–69ம ஆண்டில் ஒவ்வொரு வெளியீட்டிற்கான சந்தாதாரர்கள் எத்தனை பேர் ?

(எ) அத்தகைய வெளியீடு, தன் துணைச் சார்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) (1) "Madras Education."

(2) தமிழகக் கல்வி.

(இ) பெயர்.

			பிரதிகளின் எண்ணிக்கை.
Madras Education	..	ஏப்ரல் 1968	3,200
		ஜூலை 1968	3,500
		அக்டோபர் 1968 ..	4,000
		ஜனவரி 1969	4,000
தமிழகக் கல்வி ..	...	மே திங்கள் தவிர, ஒவ்வொரு திங்களும்.	36,000

(உ) "Madras Education" பத்திரிகைக்கு 3,312 சந்தாதாரர்கள் உள்ளனர். மாநிலத்தில் உள்ள அனைத்து தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர் நிலைப் பள்ளிகள், பயிற்சிப் பள்ளிகள், பொது நூலகங்கள் ஆகியவற்றிற்கு இலவசமாகவே தமிழகக் கல்வி (தமிழ் வெளியீடு)/ வழங்கப்படுகிறது

(எ) "Madras Education" என்னும் வெளியீடு தன் துணைச் சார்புடையதாகும். "தமிழகக் கல்வி" விலைக்கு விற்கப்படும் வெளியீடு அல்ல.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, தற்சமயம் வெளி வருகின்ற இந்த வெளியீடுகளை உறுப்பினர்களுக்கு அனுப்பினால், அதனால் பயன் ஏற்படும் என்பதை அரசு உணர்ந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கும், சில அதிகாரிகளுக்கும் மற்ற துறையினருக்கும் அனுப்பப்படுகிறது. உறுப்பினர்களுக்கு அனுப்பப்படாமல் இருந்தால், அதைப் பற்றி கவனிக்கலாம்.

Leave Rules of Teachers.

*50. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(*a*) whether the Government are aware of the fact that for want of leave rules many teachers in the aided High Schools have been granted leave on loss of pay from 1st April 1964 to 1st April 1968 ; and

(*b*) whether there is a proposal to give retrospective effect from 1st April 1964 to G.O. Ms. No. 451, Education , dated 1st April 1968 ?

4th January 1970]

விடுப்பு விதிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு கல்வி சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விடுப்பு குறித்த விதிகள் இல்லாத காரணத்தால் மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் பல ஆசியர்களுக்கு 1964-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1968-ம் வருடம் எப்ரல் 1-ஆம் தேதி வரை சம்பளமில்லாத விடுப்புக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) கல்வித் துறையின் 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் நாளிட்ட 451-ஆம் எண் கொண்ட அரசு ஆணையை 1964-ஆம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் (முற்காலத்துக்கும் பொருந்தும் வகையில்) செயல்படுத்துவதற்கான செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, 1966-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து இந்த ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சம்பளம் கொடுத்து வருகிறது. 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பிறகுதான் அவர்களுடைய விடுப்பு சம்பந்தமான உத்தரவை அரசு பிறப்பித்திருக்கிறது. 4 ஆண்டு காலத்தில் காஷுவல் லீவ் தவிர, அவர்கள் எடுத்த அவசர விடுப்பை சம்பளத்தில் கழிக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, 1966-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து லீவ் ரூல்கள்—விடுப்பு முறை பற்றிய உத்தரவை அரசு அமுலாக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் லீவ் ரூல்கள் ஒழுங்கு படுத்தப்பட்டு மற்ற பள்ளிகளைப் போன்று உதவி பெறும் பள்ளிகளில் இருக்கிறவர்களுக்கும் பெறுவதற்கு வாய்ப்பளித்திருக்கிறது. அதற்கு முன்னால் லீவினால் நஷ்டம் ஏற்பட்டதாக முறையீடு எதுவும் வரவில்லை என்ற குறிப்பு வந்திருக்கிறது. 1964-ஆம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியிலிருந்து 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி வரையில் கொடுப்பதற்கில்லை. 1968லிருந்து தான் கொடுக்கப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : 1968-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதியில் 30, 35 ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஆசிரியர்களாக இருந்தாலும், ஆண்டுக்கு 3 நாட்கள் வீதம் தான் லீவ் எலிஜிபிலிடி வருகிறது. இந்தக் கோரிக்கை நியாயமாகத் தோன்றுகிறது. அவர்களுடைய முழு சர்வீசையும் எடுத்துக் கொண்டு, லீவ் நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்பது தான் நியாயம். 1964-ம் வருடம் எப்ரல் மாதம் 1-ம் தேதி யிலிருந்து தான் நிர்ணயிக்கப்படும் என்பதை அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அதுபற்றிய முழு விவரத்தை அது சம்பந்தப்பட்டவர்கள் விண்ணப்பித்தால் ஆலோசிக்கலாம்.

Secondary Grade Teachers working in Elementary schools

*51 *Q.*—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any orders have been issued upgrading secondary grade teachers working in Higher Grade posts in Elementary schools in the State as Secondary Grade posts in 1969–70 ; and

(*b*) if so, the number of posts so upgraded ?